Crlmp No. 7530/2024 in CC.74/2019- PW-5-செல்வம்
07.12.2024
Time 03.10 PM

எதிரி தரப்பில் அ.சா.5 யை திரும்ப அழைக்கக் கோரி மனு தாக்கல் செய்ததன் பேரில் திரும்பவும் இன்று அழைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

1. நான் முதல் விசாரணையில் கூறிய விவரமான கார்த்திக்கும் சுகன்யா சேம்பரின் கணக்குப் பிள்ளையும் எங்களை வேலைக்கு அழைத்துச் சென்றது குறித்து போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்தேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

2. மூவாயிரம் ரூபாய் சம்பளம் வந்தால் அதில் 300 ரூபாயை கொடுத்துவிட்டு 2700 ரூபாயை அவர்களே வைத்துக் கொள்வார்கள் என்ற விபரத்தையும், 6 மாதங்கள் வேலை செய்த விபரத்தையும் போலீஸ் விசாரித்தபோது கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

3. ஒவ்வொரு குடும்பத்திற்கும் கணவன், மனைவி ஆகியோருக்கு தலா ரூ.20,000/- வீதம் ரூ.40,000/- முன்பணமாக கொடுத்தார்கள். அதிகாலை 04.00 மணியளவில் வாட்ச்மேன் வேலைக்காக எழுப்பிவிடுவார். மாலை வரை வேலை செய்வோம் என்ற விபரத்தை போலீசார் விசாரித்தபோது கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

4. உரிமையாளரான ஆஜர் எதிரிக்கு நாங்கள் வேலை செய்யும் நேரம் குறித்து நன்கு தெரியும். உரிமையாளரும் அவ்வப்போது பார்த்து விட்டுச் செல்வார். நல்லது கெட்டது போன்ற விஷேசங்களுக்கு ஊருக்கு செல்லவேண்டும் என்றால் என் மனைவியை மட்டுமே அனுப்புவார்கள். என்னை போகவிடமாட்டார்கள் என்ற விபரத்தை போலீசார் விசாரித்தபோது கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

5. பின்னர் எங்களுடன் வேலை பார்த்து வந்த கார்த்திக் என்பவரை சரியாக வேலை பார்க்கவில்லை என்று உரிமையாளர் அடித்துவிட்டார். யாரும் சேம்பரை விட்டு வெளியே செல்லக்கூடாது என்று சேம்பரை அடைத்துவிட்டார்கள். கார்த்திக் என்பவர் தப்பிச்சென்று தகவல் சொல்லி காவல்துறையினர் மற்றும் அதிகாரிகள்

வந்தார்கள்என்ற விபரத்தை போலீசார் விசாரித்தபோது கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

6. எங்களை அதிகாரிகள் திருச்சுழிக்கு அழைத்துச் சென்று விசாரித்துவிட்டு மறுநாள் ஊருக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த சம்பவம் குறித்துச் சொன்னேன் என்ற விபரத்தை போலீசார் விசாரித்தபோது கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

7. சுகன்யா சேம்பருக்கு போலீசாரும் வந்தார்கள். அருப்புகோட்டை தாசில்தார், காரியாபட்டி போலீஸ், நரிக்குடி போலீஸ் ஆகியோர் வந்து எங்களை சேம்பரிலிருந்து திருச்சுழிக்கு அழைத்துச் சென்றார்கள். அப்போது அபிராமம் போலீசாரும் சேம்பருக்கு வந்திருந்தார்கள். அவர்களும் சேர்ந்து தான் அழைத்துச் சென்றார்கள். நாங்கள் அபிராமம் காவல் நிலையம் செல்லவில்லை.

8. எங்களை மீட்டுச் சென்றதற்கு தாசில்தார் மீட்புச் சான்றிதழ் வழங்கினார். அது என் வீட்டில் உள்ளது. நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த தயாராக உள்ளேன்.

9. மீட்புச் சான்றை போலீஸ் விசாரணையில் கொடுக்கவில்லை. எங்களிடம் கேட்கவில்லை என்பதால் கொடுக்கவில்லை.

10. District bonded labour rehabilitation fund கணக்கிலிருந்து ரூபாய் 20,000/- எங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். எவ்வளவு பணம் என்று ஞாபகமில்லை. அதற்கு ஆதாரம் ஏதுமில்லை. இந்த விபரங்களை போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை.

11. சேம்பரின் உரிமையாளர் யார் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆஜர் எதிரிதான் உரிமையாளர். அவர் உரிமையாளர் என்பதற்கு ஏதேனும் ஆவணங்களை பார்வையிட்டுள்ளீர்களா என்றால் ஆவணங்களை எதையும் பார்க்கவில்லை. அவரிடம்தான் வேலை பார்த்தோம் என்பதால் உரிமையாளர் யார் என்று தெரியும்.

12. எங்களிடம் பணம் கொடுத்தற்கோ நாங்கள் வேலை செய்ததற்கோ எங்களுக்கு சம்பளம் கொடுத்ததற்கோ எங்களது சம்பளத்திலிருந்து பணம் பிடித்துக் கொண்டதற்கோ எங்களிடம் எந்த ஆவணமும் இல்லை. கணக்குப்பிள்ளை எழுதி வைத்துக் கொள்வார்.

13. நாங்கள் சுகன்யா சேம்பரில்தான் வேலை செய்தோம் என்பதற்கோ மூர்த்தி

தான் எங்களை வேலைக்கு அமர்த்தினார் என்பதற்கோ எந்த ஆவணங்களும் இல்லை என்றால் சரிதான்.

14. 6 மாத காலமாக நாங்கள் சுகன்யா சேம்பரில் வேலை பார்த்தோம் என்று சொல்வது உண்மை இல்லை என்றால் சரியல்ல. அந்த காலத்தில் நாங்கள் வேறு இடத்தில் வேலை செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் வேலை செய்ததாக சொல்லும் காலங்களில் எங்கள் ஊரில் ரேஷன் பொருட்கள் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான்.

15. சுகன்யா சேம்பர் என்ற பெயரில் அபிராமத்தில் எந்த சேம்பரும் இல்லை என்றால் சரியல்ல. அதற்கு மூர்த்தி உரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சுகன்யா சேம்பரில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல.

16. புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.